Koviloor Digital Library

4506
Δ2,11(ப்)

KOVILOOR ANAND... A. E. 4506 LIBRARY

முதல் வணக்கம்

ஓமெனும் பொருளாய் உள்ளோய் போற்றி!
பூமனும் பொருள்தொறும் பொலிவாய் போற்றி
அகரம் முதலென ஆனாய் போற்றி!
அகர உகர ஆதி போற்றி!

- பிள்ளையார் வழிபாடு

Koviloor Digital Library

சீரும் செல்வமும் பெற

செல்வம் அருள்க தேவா போற்றி
நல்லன எமக்கருள் நாயக போற்றி
ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
காக்க எங்களை உன்கழிலிணை
போற்றியே!

- விநாயகர் போற்றி

செப்டம்பர் 2002

4506
Koviloor Digital Library

ஓம்

எல்லா நலனும் பெற

கற்பகமே தேனுவே காமரு
சிந்தாமணியே
அற்பகமார் ஐங்கையுடை ஆரமுதே - சிற்பமுறு
தந்தா வளமுகத்துத் தற்பரனே சாலவும்
உவந்தாள நாயேன்முன் வா.

- உ.வே.சா.

குமுதம் பக்தி ஸ்பெஷல் இணைப்பு

Koviloor Digital Library

வளங்கள் அனைத்தும் பெற

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைப் போக்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப்
பேணுவாம்.

- விருத்தாசல புராணம்

செப்டம்பர் 2002

Koviloor Digital Library

அறிவும் ஆற்றலும்பெற

சித்திதரும் புத்திதரும் செந்திருவைச்
சேர்விக்கும்
பக்திதரும் மெய்ஞ்ஞானம் பாலிக்குங் -
கொத்தி
அரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக்கால்!

\- அருணகிரியந்தாதி

குமுதம் பக்தி ஸ்பெஷல் இணைப்பு

Koviloor Digital Library

ஓம்

வித்தைகள் கற்றிட

அத்தி முகத்தோனே அரனார் திருமகனே
சத்தியின் புத்திரனே சரிந்த வயிற்றோனே
முத்தி அளிக்கின்ற முருகற்கு மூத்தோனே
வித்தை எனக் கருளும்
வேலவர்க்கு மூத்தோனே

- புலந்திரன் தூது

செப்டம்பர் 2002

Koviloor Digital Library

கல்வியறிவு பெற



பாலும் தெளிதேனும் பாகும்
பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்
தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா.

- ஔவையார்

Koviloor Digital Library

எழுத்தறிவு பெற்றிட

எடுக்குமாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்குமேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்களிற்றினைக் கருத்துள்
இருத்துவாம்.

- சேக்கிழார்

Koviloor Digital Library

மனம் ஒருமைப்பட

யானை முகத்தான் பொரு
விடையான் சேயழகார்
மான மணிவண்ணன் மாமருகன் -
மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன் என்
உள்ளக் கருத்தின் உளன்.

- கபிலதேவ நாயனார்

Koviloor Digital Library

சஞ்சலங்கள் நீங்க

பக்தியுடையார் காரியத்திற்
பதறார் மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மை போல்
மெல்லச் செய்து பயனடைவார்
சக்தி தொழிலே அனைத்து மெனிற்
சார்ந்த நமக்குச் சஞ்சல மேன்?
வித்தைக் கிறைவா கணநாதா;
மேன்மைத் தொழிலிற் பணியெனையே!

\- சுப்ரமண்ய பாரதி

Koviloor Digital Library

சிந்தை தெளிவுபெற

குருவே! பரமன் கொழுந்தே! பணிந்தேன்
குவலயம் போற்றும் கணநாதா!
வருவாய் நினைவில் வந்ததெனை ஆள்வாய்
வடிவேலவனின் சோதரனே!
அருள்வாய் உனையே அனுதினம் பணிவேன்
அன்னை பராசக்தி அருள் மகனே!
திருமால் மருகா திருவடி சரணம்
தீன ரட்சகனே கண நாதா!

- ஸ்ரீ விநாயக ஸப்தகம்

Keyileer Digital Library

அருள் பெற்றிட

பிஞ்சுமதிச் சடாமகுடப் பெருமானைப் பிரியாத
வஞ்சி இமவான் தவத்தின் வருபேடை
மயிலுதவும்
அஞ்சிறை வண்டிரைத்து விழும்அருவி
மதம் ஒழுகுகவுள்
குஞ்சரவெம் புகழ்முகத்துக் குரிசிலடி
இணைதொழுவோம்.
- பிரமோத்தர காண்டம்



Koviloor Digital Library

உதவிகள் பெற

களியானைக் கன்றைக் கணபதியைச்
செம்பொன்
ஒளியானைப் பாரோர்க்கு உதவும்
அளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும்
மற்றவன்றாள்
நண்ணுவதும் நல்லோர் கடன்.

- திருவிரட்டை மணிமாலை

Koviloor Digital Library

மணப்பேறு பெற

கைத்தல நிறைகனி
அப்பமோடவல் பொரி
கப்பிய கரிமுகன்
-அடிபேணி
கற்றிடுமடியவர்
புத்தியிலுறைபவ
கற்பகமென வினை
-கடிதேகும்
மத்தமும் மதியமும்
வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள் புய
- மதயானை

Koviloor Digital Library

புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு
-பணிவேனே
முத்தமிழடைவினை முற்படு
· கிரிதனில்
முற்பட வெழுதிய
- முதல்வோனே
முப்புரமெரி செய்த அச்சிவன்
உறை ரதம்
அச்சது பொடி செய்த
- அதிதீரா
அத்துயரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை - இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு
முருகனை

Koviloor Digital Library

எண்ணம் சிறக்க

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்
கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி
போற்றுகின்றேன்.

\- கந்தரந்தாதி

Koviloor Digital Library

இடர்கள் நீங்க

பிடியதனுருவுமை கொளமிகு
கரியது
வடிகொடு தனதடி வழிபடு
மவரிடர்
கடிகணபதிவர அருளினர் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

- சம்பந்தர்

4506

Koviloor Digital Library

எண்ணியன ஈடேற

ஓத வினையகலும் ஓங்குபுகழ் பெருகும்
காதல்பொருள் அனைத்தும் கைகூடும் - சீதம்
பனிக்கோட்டு மால்வரைமேல்
பாரதப் போர்தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

- பெருந்தேவனார்

Koviloor Digital Library

வினைகள் விலகிட

வெள்ளைக் கொம்பன்

விநாயகனைத் தொழத்

துள்ளியோடும் தொடர்ந்த

வினைகளே

அப்பம் முப்பழம் அமுது செய்தருளிய

தொப்பைஅப்பனைத் தொழ வினைஅறுமே.

- விநாயகர் துதி

Koviloor Digital Library

தடைகள் நீங்க

அகரமென அறிவாகி உலகமெங்கும்
அமர்ந்தகர உகர மகரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறுமாகி
பல்வேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொருள்நான் இணையும்
இடர்தீர்ந்தெய்வப்
போற்று நருக் கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின் மறக் கருணை புரிந்தாண்டு
கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து
வாழ்வோம்.

\- கச்சியப்ப முனிவர்

Koviloor Digital Library

வாழ்வு வளம்பெற

வானோடு நீரும் வளியும் தீயும்
வையகம் யாவும் உன் வடிவே
மானிட வாழ்வை மகிழ்வுறச்
செய்வாய்
மங்கலப் பொருளே கணநாதா!

- விநாயக ஸப்தகம்

Koviloor Digital Library

அமைதி நிலவிட

மொழியின் மறைமுதலே
முந்நயனத் தேறே
கழியவரும் பொருளே கண்ணே
- செழிய
காலாலயனே, எங்கள்
கணபதியே நின்னை
அலாலயனே சூழாதென் அன்பு
- மும்மணிக்கோவை

Koviloor Digital Library

தீவினைகள் அகல

விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை
தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாம் - தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

- திருவிரட்டை மணிமாலை

குமுதம் பக்தி ஸ்பெஷல் இணைப்பு

Koviloor Digital Library

இம்மையிலும் மறுமையிலும் சிறப்புற வாழ

வானுலகும் மண்ணுலகும் வாழ
மறைவாழப்
பான்மைமிகு செய்யதமிழ்ப்
பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி
நால்வாய்
ஆனைமுகனைப் பரவி
அஞ்சலி செய்கிற்பாம்!
- சேக்கிழார் புராணம்

Koviloor Digital Library

நல்வாக்கும் நல்மனமும் கிட்ட

வாக்குண்டாம் நல்ல
மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி
நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

- ஔவையார்

Koviloor Digital Library

எமபயம் அகல

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு
கைத்தலமுட
வெற்றி புனைந்த விழிமூன்றும்
- பெற்றதொ(
தண்டைக்கால் வாரணத்தைத்
தன்மனதில் எப்பொழுது
கொண்டக்கால் வாராது கூற்று.
- திருவருட்ப

Koviloor Digital Library

குருவருளும் திருவருளும் பெற



திருவுங் கல்வியுஞ் சீருஞ் சிறப்பும் உன்
திருவடிப் புகழ் பாடும் திறமும் நல்
உருவும் சீலமும் ஊக்கமும் தாழ்வுறா
உணர்வும் தந்தெனது உள்ளத் தமர்ந்தவா
குருவும் தெய்வமுமாகி அன்பாளர்தம்
குறை தவிர்க்கும் குணப்பெருங் குன்றமே
வெருவும் சிந்தை விலகக் கஜானனம்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

- திருவருட்பா

H506
D2,11 (...)

குமுதம் பக்தி ஸ்பெஷல் இணைப்பு

Koviloor Digital Library
ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்ஓம்

புகழும் மேன்மையும் பெற

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர் கை.

- திருவிரட்டை மணிமாலை